முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி

—வார இதழ்—

முரசு 5 | 11—7—58 | வெள்ளி | ஒலி 13

அவர்கள் நினைவில்...!

சவக் காட்டிலே தமிழர்- 'சம்மந்தமில்லை' என்கிறார் நேரு!

கல்லால் வடிக்கப்பட்டு, மனித உருக் கொண்டு காட்சி தரும் சிலையின் கண்களிலிருந்து கூடக் கண்ணீரை வரவழைத்து விட முடியும்—

கொல்லும் திறன் படைத்த கொடிய காட்டு விலங்குகளின் இருதயத்தில்கூட கனிவை எதிர் பார்க்க முடியும்—

ஆனால்.....அவைகளினும் கொடியவரா நம்மை ஆளவந்தக் காவலராம் நேருபிரான் என்ற சந்தேகத்தைக் கிளப்பி விட்டிருக்கிறது சமீபத்தில் வெளி வந்த பத்திரிகைச் செய்தி ஒன்று!

மனிதனே மனிதனை வெட்டுகிறான்; கொல்லுகிறான்; உடலைக் கூறுபோடுகிறான்; குழி தோண்டிப் புதைக்கிறான்; இரத்த வெறிபிடித்தலையும் வேங்கையினும் கொடியவனாய் உலா வருகிறான்!

நாகரிக யுகத்திலே காணக் கூடாத அநாகரிகச் செயல்கள் தலைவிரித்தாடுகின்றன! கடைகள் கொளுத்தப்படுகின்றன; "நீதி இல்லையா இங்கு?" என்று குமுறிக் கேட்போரின் உடைகள் கிழித்தெறியப்படுகின்றன!

'உன்நாடு செழிக்க உழைத்தவர்கள்-உதிரம் கொட்டியவர்கள் நாங்களல்லவா?' — என்று கேட்டால், 'நாயினும் இழியோனே! நாடோடியே!' என்ற பட்டப் பெயர்கள் வழங்கப் படுகின்றன, பவிசு கெட்டத் துரைத்தனத்தாரின் பக்கபலத்தோடு!

"உதைபட்டு — வதைபட்டு வாழ்ந்து தொலைப்போம் என்ற ஆசையிருந்தால் கற்பைக் காணிக்கையாக்கு! அல்லது மானம்தான் பெரிதென்ற நோக்கமிருந்தால் மரணமுகட்டிற்கும் காட்டுவோம் வழி!" என்று தாய்க் குலத்திற்கு அறைகூவல் விடப்படுகிறது!

இலங்கைத் தமிழர்:— மேற்கண்ட இடிபாட்டுக்கும், இடர்பாட்டுக்கும் ஆட்பட்ட பரிதாபத்திற்குரியவர்கள் என்பது உலகறிந்த உண்மை!

சிங்கள வெறியர்கள்:-தமிழர் தம் உழைப்பால் உண்டு கொழுத்து, அவர்களைக் கொன்று குவிக்கவும் தயங்காத வெறுப்புணர்ச்சியின் பிரதிபிம்பங்களாக மாறிவிட்டார்கள் இன்று—என்பதும் மறுக்க முடியாத உண்மை!

கல்லும் கசிந்துருகும்—கொல்லும் குணம படைத்த காட்டு விலங்கும் கருணை காட்டும், தமிழர் தம் சொல்லவொண்ணா சோகக் கதை கேட்டு!

ஆனாலும் நேரு சொல்லுகிறார்—

"...இலங்கையில் நூற்றுக் கணக்கான ஆண்டுகளாக வசித்து வருகின்ற தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்கும்தான் சண்டை ஏற்பட்டு நடந்து வருகிறது. நமக்கும் அதற்கும் சம்மந்தமில்லை!...."—என்று!

"அக்கிரமம்; அநியாயம்; அநாகரிகம் — என்று நல்ல நெஞ்சு படைத்தவர்கள் அத்தனை பேரும் குமுறுகிறார்கள்!

ஆனால் பண்டித நேருவின் கூற்றைக் கவனியுங்கள்—

"நமக்கும் அதற்கும் சம்பந்தமில்லை"யாம்!

முன் கோபக்காரராயிற்றே—இந்த அராஜகத்துக்குக் காரணமான சிங்கள மொழி வெறியைச் சாடுவார்; பாராமுகமாக இருப்பது மட்டுமல்ல; பக்கபலமாகவும் துணைபுரிந்து வருகின்ற பண்டாரநாயகாவின் விபரீதப் போக்கைக் கண்டிப்பார் — என்று கேள்வியைக் கேட்டுவிட்டு, கையில் எழுதுகோலுடன் தயாராகக் காத்திருந்த பத்திரிகை நிருபர்கள் ஏமாந்து போனார்களாம், இந்த விசித்திரமான பதிலைக் கேட்டு!

"இலங்கையில் வாழுகின்ற தமிழர்கள் நமக்கு அன்னியர்கள்! அவர்கள் அங்கேயே வாழ்ந்து வருபவர்கள். அவர்கள் இலங்கைப் பிரஜைகள்!"

இலங்கை வாழ் தமிழர்கள் நமக்கு அன்னியர்களாம் — ஆகவே அவர்களுக்கும் நமக்கும் சம்மந்தமில்லையாம்!

இப்படிச் சொல்லி, அவர்களது நலனில் கொண்டிருக்கும் அக்கறையற்ற தன்மை குறித்து எழும்பும் கண்டனத்திலிருந்து தப்பித்துக் கொள்ள நினைக்கிறார் நேரு!

அன்னியர்களாக—ஒரு நாட்டு மக்களிடமிருந்து மாறுபட்டவர்களாகத் தோன்ற வேண்டுமெனில் எப்படியிருக்க வேண்டும்?

மொழியால் மாறுபட்டிருக்க வேண்டும் — இனத்தால் பிரிந்திருக்கவேண்டும்—கலாச்சாரத்தால், பழக்க வழக்கங்களால் வேறுபட்டிருக்கவேண்டும்!

பண்டிதநேரு காஷ்மீர் தேசத்து பிராமண குலத்திலே பிறந்தவர்; வடக்கே வாழ்பவர்! அவரது மொழி நிச்சயம் தமிழலல!

அவருடைய, அவரைச் சேர்ந்தோருடைய கலாச்சாரம் வேறு; பழக்க வழக்கங்களும் வேறு!

இந்த உண்மை நிலையையும், நேருவின் இலங்கைத் தமிழர் பற்றிய இன்றைய கூற்றையும் தான் நாம் இப்போது ஒருங்கே வைத்துப் பார்க்க வேண்டும்!

அவர் குறிப்பிடுகிற "நமக்கு" என்பதில பொதிந்து கிடக்கிற பொருளைத்தான் நாம் கவனிக்க வேண்டும!

நமக்கு — என்றால் யாருக்கு? நேருவுக்கு; வட இந்தியருக்கு!

ஆமாம்; நேருவுக்குத்தான் இலங்கை வாழ் தமிழர்கள் அன்னியர்கள்! வட இந்தியருக்குத்தான் அந்த உழைக்கப் பிறந்த இனம் வேற்றினம்!

ஏனெனில், தமிழகத்துக்கும் இலங்கைக்கும் நெருங்கிய தொடர்பு நீண்ட நாட்களாக உண்டு!

- தமிழகத்து வேந்தர்கள் அங்கே தங்களது வெற்றிக் கொடியை உயர்த்தியிருக்கிறார்கள்!
- இலங்கைத் தமிழர்களை கடல்தான் பிரித்ததே தவிர —சரித்திரம்தான் வேறுக்கிற்றே தவிர — மொழியால் ஒன்றுபட்டவர்கள்! கலாச்சாரத்தால், பழக்க வழக்கத்தால் என்றும் பிரியாதவர்கள்!
- இவை தவிர, உலகிலேயே உழைக்கப் பிறந்த இனம் தமிழினம் — இலங்கையின் தேயிலைக் காடுகளை, ரப்பர் தோட்டங்களைத் தங்களின் வியர்வையால் பொன் விளையும் பூமியாக்கியவர்கள் தமிழரே!

ஆகவே அவர்கள் நமக்கு அன்னியரல்ல! அதாவது, தமிழருக்கு அன்னியரல்ல!

ஆனால் நேருவுக்கு அன்னியர்தான்! கடலுக்கு அப்பால் இருக்கின்ற தமிழர்கள் மட்டுமல்ல; விந்தியத்தைத் தாண்டி இருக்கின்ற தமிழர் கூட வேண்டாதவர்கள்தான்!

அவருடைய அந்த வெறுப்பு மனப்பான்மையை வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகள் பலவற்றை நாம் கண்டிருக்கிறோம்! முன்பு தென்னகத்தில் புயலடித்து, இயற்கை தமிழர்களைப் பலிகொண்ட நேரத்தில் அவர் மலையாளத்தில் உல்லாச பவனி வந்தது அந்த வெறுப்பின் விளைவுதான்! இப்போது இலங்கையிலே உடன் வாழ்ந்த மனிதனே தமிழர்களைக் கொன்று குவிக்கின்ற நேரத்தில், குலு பள்ளத்தாக்கிலே ஓய்வு பெறச் சென்றதும் அந்தப பிடிக்காத தன்மையின் படப்பிடிப்புதான்!

பிறந்த நாட்டில் வாழ வகையின்றி— இலங்கை சென்று அங்காடிக் கடை வைத்த 'அன்றாடம் காய்ச்சிகள்' இன்று அந்தக் கடைகளையும் தீய்க்கு இரையாக்கிவிட்டுத் தேம்பி அழுகின்ற குரல் அவரது செவிகளில் இன்ப கீதமாக ஒலிக்கிறது!

(தொடர்ச்சி பக்கம்—7)

நாட்டிலே ஓயாமல் இப்படி ஒரு உபதேசம் நடக்கிறது:

★ எழுத்தாளர்கள் அரசியலில் சேரக்கூடாது.

★ கலைஞர்கள் அரசியலில் சேரக்கூடாது.

★ மாணவர்கள் அரசியலில் சேரக்கூடாது.

★ வாத்தியார்கள் அரசியலில் சேரக்கூடாது.

★ லாயர்களும் டாக்டர்களும் அரசியலில் சேரக்கூடாது.

★ தொழிலாளிகள், குடியானவர்களும் கூட சேரக்கூடாது.

★

ஒரு சந்தேகம்...

பின்னர் யார்தான் அரசியலில் சேரலாம்?

—கே. ஏ. அப்பாஸ் ('பிளிட்ஸ்')

தூத்துக்குடி தேர்தல் நிதிக்கு

வெள்ளி 11—7—58 சென்னை

சாவுக்குப் பின் சிகிச்சை!

தமிழகத்தைப் பொறுத்தவரை என்றும் தீராத ஒன்றாய்—தொல்லைகள் பலவற்றின் நிலைக்களனாய் இருந்துவருவது கைத்தறியாளர் பிரச்சினைதான். தங்கள் அவல வாழ்வு குறித்த அழுது புலம்புவதோடு மட்டுமின்றி, ஆட்சியாளரிடமும் தங்கள் கோரிக்கைகளைப் பலமுறை எடுத்துச் சொல்லி வந்திருக்கின்றனர், கைத்தறியாளர்கள்.

ஆனால், ஆட்சிபீடத்தினர் கடைப்பிடிக்கும் தவறான முறைகளும், இச்சைபோல் நடக்கும் கோணல் வழிகளும் அவர்களது பிரச்சினையில் மேலும் மேலும் பற்பல இடுக்கண்களும் இடையூறுகளும் ஏற்படத்தான் வித்தாய் அமைந்துவிட்டது!

உலகிலே காணமுடியாத அவல நிகழ்ச்சியாம், பட்டினிப் படை புறப்பட்டது, ஒரு நாள்! வறுமைச் சாவுகள் பல நிகழ்ந்தன!

இப்போதும் அந்த நிலை இல்லாதொழியவில்லை—இனியேனும் அவர்களது பிழைப்புக்கு ஊறுதேடும் செயல்களில் ஈடுபட வேண்டாம் என்ற எண்ணமுமில்லை, ஆட்சியினருக்கு!

சென்னை ஸ்தல ஆட்சித்துறை அமைச்சர் திருமதி லூர்தம்மாள் சைமன் அவர்கள், இப்போது ஒரு திட்டத்தை வெளியிட்டிருக்கிறார். மாநில கைத்தறியாளர் கூட்டுறவு சங்கங்களின் மாநாட்டைத் திறந்து வைக்கும்போது, புதிதாக இரண்டு நூற்பு ஆலைகள் தொடங்கப்பெறும் என்று அறிவித்துள்ளார். அருப்புக்கோட்டை, சேலம்—இரு இடங்களிலும் துவங்க இருக்கின்ற அந்த ஆலைகள் கைத்தறியாளர்களுக்கு நல்ல தரமுள்ள நூலை விநியோகிக்குமாம்.

இது தேவையான திட்டம் தானே—என்று கேட்கக்கூடும், தென்னகத்தின் தொழில் வளர்ச்சியில் அக்கறை கொண்டவர்கள்—மத்திய மாநில அரசுகளால் அது அலட்சியப்படுத்தப்படும் அக்கிரமத்தைக் கண்டு மனம் வருந்துகிறவர்கள்.

தொழில் வளர்ச்சி முக்கியம்தான்; அதற்கான திட்டங்கள் அவசியம்தான்; ஆலைகளும் தேவைதான்; மறுக்க முடியாது!

ஆனால் இப்போது அமைச்சர் குறிப்பிடுகிற அந்த நூற்பு ஆலைகள் அவசியம்தானா?

நெசவுத் துறையில் ஏற்பட்டுள்ள ஆபத்தான மந்த நிலை—நூற்பு நெசவு ஆலைகள் அடைந்துள்ள இக்கட்டான நிலை—இவற்றை நன்கு உணர்ந்தவர்கள் இந்த ஆலைகளின் துவக்கத்தால் ஏற்படக்கூடிய இன்னல்களையும் கண்டுகொள்ள முடியும்.

பன்னெடுங் காலமாகவே நமது நாட்டு கைத்தறி நூலுக்கும் உடைகளுக்கும் வெளி நாடுகளில் நல்ல செல்வாக்குண்டு; வரவேற்புண்டு—என்பது உலகறிந்த உண்மை. இரண்டாவது உலகப் போருக்கு முன்னால் இந்த வாணிபம் உச்ச நிலையை அடைந்திருந்தது! அதன் காரணமாக இங்குள்ள கைத்தறியாளர்களின் வாழ்க்கைத் தரமும் பார் மெச்ச உயர்ந்திருந்தது!

ஆனால், இந்த நிலையில் ஒரு திடீர் மாறுதல் ஏற்பட்டது. அரசியலார் அவைகளின் ஏற்றுமதிக்குக் கட்டுப்பாடுகள் விதித்துவிட்டனர், கண்களைத் திறந்துகொண்டு விஷம் அருந்துவதைப் போல! அத்தகைய தற்கொலைக்கு ஒப்பான செயல்களால் வெளி நாடுகளுக்கு நூலும் ஆடைகளும் ஏற்றுமதி செய்வது பெரிதும் தடைபட்டுவிட்டது!

உலக அரங்கிலே நம் நாட்டுத் துணியையே நம்பியிருந்த ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள் நமது துணி கிடைக்கவில்லையே என்பதற்காகக் காத்திருக்கவில்லை. அவசிய நிலை ஏற்பட்டுவிட்ட காரணத்தால், அந்தந்த நாடுகளே உற்பத்தியில் உடனடியாக ஈடுபட்டுவிட்டன. தத்தமது நாட்டுக்குத் தேவையான உற்பத்தி எல்லையையும் மிக்க விரைவில் எட்டிவிட்டன. அப்படியின்றி, பற்றாக்குறை ஏற்பட்ட நேரத்திலேகூட ஜப்பான், பிரிட்டன், அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகள் குறைந்த விலையில் தங்களிடமிருந்து துணிகளை விநியோகம் செய்யத் தொடங்கிவிட்டன.

இந்திய அரசினரின் அந்த ஏற்றுமதிக் கொள்கையினால் பாதிக்கப்பட்டது வேறெந்த வெளி நாடுமல்ல; நமது நாடுதான்! பணமாக வேண்டிய நூலும், துணிகளும் கிடங்குகளில் தேங்கிக் கிடந்தன! தேம்பி அழத் தொடங்கிவிட்டது கைத்தறியாளர் வர்க்கம்! அவர்களது வாழ்க்கையில் சோதனையான கட்டம் ஆரம்பமாகிவிட்டது; அப்போது!

அதன் பிறகு, இந்திய அரசினர் கைத்தறியாளரின் நிலை கேவலமாகி வருவதைக் கண்டனர்; தொழில் மந்தமாகிவிட்டதை உணர்ந்தனர்; குறைபாடு கண்டு கூப்பாடு போட்டவர்களின் குரலுக்கு செவி மடுத்தனர்!

உடனடியாக பழைய கட்டுப்பாட்டைத் தளர்த்தினார்கள்; ஏற்றுமதி செய்யலாம் என்று இசைவையும் தந்தார்கள்! விழுங்கிய விஷத்தை வெளிக்கொணர முயன்றார்கள்; ஆனால் விஷம் தன் வேலையைச் செய்துவிட்டது!

அந்த நேரத்தில் வெளிநாடுகளில் நமது நாட்டு நூலுக்கும் துணிகளுக்கும் வரவேற்பில்லை! அவைகளின் விலையைவிடக் குறைந்த விலையில் மற்ற நாட்டினர் வியாபாரத்தைப் பிடித்துக் கொண்டனர்!

இந்திய அரசினரின் இந்தத் தகாத குறுக்கீடு காரணமாக அதள பாதாளத்தில் வீழ்ந்துவிட்ட கைத்தறியாளர் வர்க்கம் மீண்டிட வழியே இல்லாது போய்விட்டது! அதற்குப் பிறகும் கைத்தறியாளரது பல வேண்டுகோள்களுக்கு இந்திய அரசு செவிமடுக்காத காரணத்தால், இந்த இழி நிலையே வளர்ந்தது! **1957**-ம் ஆண்டில், அதற்கு முந்தைய ஆண்டுகளில் இருந்த கையிருப்பைவிட மூன்று கோடியே முப்பது லட்சம் ராத்தல் நூல் அதிகமாகத் தேங்கிவிட்டது!

தூங்கும் துரைத்தனத்தாரின் வீம்புச் செய்கையால் தேங்கிவிட்ட துணிகளையும், நூலையுமே வெளியேற்றுவது பெரும் தொல்லையாக இருக்கிறது; இன்று!

இந்நிலையில் மேலும் நூற்பு ஆலைகள் இயங்கி என்ன பலன்?

நெருக்கடி நிலைமையை சமாளிக்க முடியாமல் பல ஆலைகளின் கதவுகள் நிரந்தரமாக மூடிக்கொண்டன. பல்லாயிரக் கணக்கான கைத்தறியாளர்கள் வேலையிழந்தனர்! ஒரே துறையை நம்பி காலம் கடத்திவந்த அந்த நெசவாளர் பரம்பரை கண்கள் குளமாக—எதிர்காலத்தில் நம்பிக்கையின்றி ஏங்கி அலைகிறார்கள்!

இந்த நிலைதான் இன்று வரையிலும் நீடித்து வருகிறது!

தயாரான நூலும், நெய்யப்பட்ட துணிகளுமே நிறைய தேங்கிக் கிடக்கின்றன!

அதை வெளியேற்றவே வழியில்லை!

அப்படி இருக்கையில் மீண்டும் இரண்டு புதிய நூற்பு ஆலைகள் ஏன்?

அந்தத் துறையில் நல்ல அனுபவம் பெற்றவர்கள் புதிய ஆலைகள் தேவையில்லை என்றுதான் சொல்லுகிறார்கள்.

ஆகவே அவைகளுக்கென செலவிடப்பட இருக்கின்ற பெருந்தொகையை வேறு பயனுள்ள துறைகளில் ஈடுபடுத்தலாம் என்பதே நமது எண்ணம்.

கேள்வி - பதில்!

கேள்வி:— "தி. மு. க— கேட்கும் திராவிடக் கூட்டாட்சியில் சுதந்திரத் தமிழ்நாடு உண்டா; இல்லையா?"

பதில்:—"ஒரு அணாவுக்குள் காலணா இருக்கிறதா இல்லையா—என்று கேட்பது போலிருக்கிறது இது!"

உங்கள் பங்கைச் செலுத்துங்கள்!

சென்ற இதழில்...

அறவாழியை அந்த ஊரைவிட்டே விரட்ட வேண்டும் என்பதற்காக பஞ்சாயத்தார் பரமசிவமும், கரகமாடிக் கண்ணனும் சேர்ந்து தயாரித்த மகஜரில், ஊர் மக்களோடு பொன்மணியும் கையொப்பமிட்டிருந்தது கண்ட அறவாழி திடுக்கிடுகிறான். அவனது காதல் வாழ்க்கை துவக்கத்திலேயே ஏமாற்றம் தந்துவிட்டதாக எண்ணி வருந்துகிறான்.

கையெழுத்து வேட்டையின் கடைசிக் கட்டத்தை நிறைவேற்றிய சுருளிமலை, அந்த மகஜரைத் தன்னிடம் தருவார்கள் தபாலில் சேர்க்க—அதைக் கிழித்தெறிந்து விடலாம்—அறவாழியைக் காப்பாற்றிவிடலாம் என்றுதான் எண்ணியிருந்தான். அதனால் தான் தன் குடும்பத்தாருடைய கையொப்பங்களையும துணிந்து வாங்கியிருந்தான். ஆனால், நினைத்ததற்கு மாறாக மகஜரைத் தபாலில் சேர்க்கும் பொறுப்பை வலியச் சென்று ஏற்கிறான், கண்ணன். மகஜரையும் சுருளிமலையிடமிருந்து வாங்கிக்கொள்கிறான்.

இச் செய்தி அறிந்த பொன்மணி மிக வருந்துகிறாள். எப்படியாவது அறவாழியைச் சந்தித்து—நிலைமையை விளக்கி—தன் தவறுக்கு மன்னிப்பு பெற்றுவிட எண்ணுகிறாள்.

ஒரு நாள் காலை நேரம்...சந்தைக்கு விற்பனைக்காக பானை, சட்டிகளைச் சுமந்து சென்ற பொன்மணி, பள்ளிக்கூடத்தின் அருகில் வந்ததும் நின்றுவிடுகிறாள். அறவாழியை எப்படியும் சந்தித்து விடுவது என்ற முடிவுக்கு வருகிறாள். பள்ளியின் சுற்றுப்புறங்களைச் சீர் செய்துகொண்டிருந்த தொழிலாளர்கள் மழை வரவே வெளியேறுகின்றனர். அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு, பள்ளியில் நுழைந்து, அறவாழியின் அறையை அடைகிறாள் பொன்மணி.

எதிர்பாராத வண்ணம் பொன்மணியைக் கண்ட அறவாழி திகைக்கிறான். அதே சமயம் வெளியே 'தடால்' என்றொரு சப்தம் எழும்புகிறது.

பொன்மணி திடுக்கிட்டு வாசல் பக்கம் ஓடுகிறாள். வாசலில் நின்ற தென்னை மரத்திலிருந்து விழுந்த பெரிய மட்டை ஒன்று, சந்தை வியாபாரத்திற்குப் போக வேண்டிய பானைகள், சட்டிகள் அனைத்தையும் சுக்கல் சுக்கலாக உடைத்தெறிந்திருக்கிறது, அங்கே...!

* * *

சிதறிவிட்ட பானைகளைப் பார்த்தவாறு அப்படியே அயர்ந்துபோய் திகைத்து அசைவற்று நின்றாள் பொன்மணி.

அறவாழியும் வாயிற் புறம் வந்து அனுதாபத்தோடு அவளை உற்று நோக்கினான். "த்சு! த்சு! எல்லாப் பானைகளுமே உடைந்துவிட்டதா?" அவனது அனுதாப வார்த்தைகள் அவளுக்கு ஆறுதலாக இருந்தன. எத்தனை பானைகள் உடைந்தால் என்ன; தன்னைப் பற்றி அறவாழியின் உள்ளத்திலே முதல் நாள் தோன்றிய அன்பு அரண் உடைந்துவிடாமல் இருந்தால் அதுவே போதும் அவளுக்கு!

ஆனால் ஒன்று...உடைந்து சிதறிக் கிடக்கும் பானையோடுகள் ஒவ்வொன்றிலும் அவளது தந்தை பொன்னையாவின் உருவமும், தாயார் பூஞ்சோலையின் வடிவமும் வேதனைக் கோலத்தில் விழிநீர் பெருக்கியவாறு நிற்பதுபோல் தோன்றியது அவளுக்கு.

அந்தப் பானைகளை அன்று சந்தையில் விற்றுவரக் கூடிய காசில்தான் அப்பாவுக்கு வைத்தியர் சொன்ன மிக முக்கியமான மருந்தொன்றைத் தயாரிக்க முடியும். அதை நினைத்ததும் அவளையும் மீறி ஆறெனப் பெருகிவிட்டது கண்ணீர்.

தாயார் மாலையில் தன் வருகையை ஆவலோடு எதிர்பார்த்திருப்பார்களே—தந்தையும் அருந்தப் போகும் மருந்தை நினைத்து நோயைப் பற்றிய கவலையிலிருந்து ஒரு சிறிது விடுபட்டிருப்பாரே — ஆனால் இப்போது எல்லாம் தூள் தூளாகிவிட்டதே — என் செய்வது — என ஏங்கினாள் அந்த ஏந்திழை. உடற்கட்டுக்கு மேலும் அழகு தருவது போல் ஒரு ஆழ்ந்த பெருமூச்சு! அப்பப்பா — அதிலே எத்தனை சோகம்! வேதனை! விசாரம்! பெருமூச்சின் அர்த்தத்தை கவனிக்க முடியவில்லை அறவாழிக்கு! பானைகளை உடைத்துவிட்டதற்கு வீட்டில் திட்டுவார்கள் என்று பயப்படுகிறாள் பொன்மணி யென்றே அவன் கருதினான்.

"பயப்படாதே! வீட்டில் திட்டுவார்கள் என்றுதானே இவ்வளவு கவலை?..."

பொன்மணி பதில் கூறவில்லை. உடைந்த பானைகளைப் பொறுக்கிச் சேர்த்தாள். ஒரே ஒரு அழகிய வேலைப்பாடமைந்த சிறு கலயம் மட்டும் மிஞ்சியிருந்தது. அதைக் கையிலே எடுத்தாள். அறவாழி, அருகே சென்று கலயத்தை வாங்க முயன்றான். அவளும் அவனிடம் அதைக் கொடுத்துவிட்டாள்.

"ஆகா! ரொம்ப அழகான கலயம். என்ன அருமையான வேலைப்பாடு! இதை நான் எடுத்துக் கொள்கிறேன்—இதன் விலை என்ன?"

பொன்மணி பதில் பேசவில்லை. அறவாழி அவளைப் பேச வைக்க முயன்றான்.

"எல்லாப் பானைகளும் உடைந்துவிட்டதே — இவைகளின் விலை என்ன இருக்கும்?" என்று கேட்டான் அறவாழி.

"சந்தையில் விற்றால் ஏழெட்டு ரூபாய் கிடைக்கும்." என்றாள் பொன்மணி.

"அதிருக்கட்டும்—இந்தக் கலயத்தின் விலையைச் சொல்லு!" என்றான் அவன்.

தூத்துக்குடி நிதி-

தோழர்களே! அனுப்புங்கள்!!

★ அதிகார பலம்—

★ பணபலம்—

★ படைபலம்—

அத்தனையையும் எதிர்த்துப் பாட்டாளிகளின் கழகம் போட்டியிடுகிறது, தூத்துக்குடியில்!

★ காலணா, அரையணாக்களாகக் காசு சேர்த்து ஜனநாயக உரிமையை நிலை நாட்டப் பாடுபடுகிறோம். நம்மிடம் மிட்டா மிராசுகள் இல்லை! தேவைப்படும் போது பணம் கொட்டுகிற தேசீய முதலாளிகள் இல்லை! தேய்ந்துபோன மக்களுக்குப் பணி புரியவே இத்தேக மெடுத்தோம் எனக் கருதியுள்ள கடமை வீரர் பாசறை நமது கழகம்! இந்தக் கழகத்தின் சார்பில் போட்டியிடும் நமது தோழர் சிவசாமி வெற்றி வாகை சூட—

நிதி குவித்திடுவீர்!

உங்கள் ஆதரவை—

அன்பை—

ஆர்வத்தை—

நன்கொடை அனுப்புவதன் மூலம் காட்டிடுவீர் இப்போதே!

நாட்கள் அதிகமில்லை!

நம்மிடமோ பெரும் பொருள் இல்லை!

சிறுதுளி-பெருவெள்ளம்!

செயல்! செயல்! அதுவும் இன்றே!

தூத்துக்குடித் தொகுதித் தேர்தலில்

"கலயமா? அதற்கு விலையே கிடையாது! எடுத்துக் கொள்ளலாம்!"

"இல்லை! இதற்கு நான் ஒரு விலை நிச்சயித்திருக்கிறேன். இதன் விலை பத்து ரூபாய்! இன்னும்கூட அதிக விலை மதிப்பிடலாம்—ஆனால் ஆரம்ப ஆசிரியன் ஒருவன போடக்கூடிய மதிப்பு இந்த நிலையில் இவ்வளவுதான்!"

"உங்களுக்கு எதற்காக இந்த மண் கலயம்?"

"இது தெரியாதா உனக்கு? எனக்கு ஆசிரியர் வேலை 'அரோகரா' ஆகப்போகிறது! அதன் பிறகு இதை வைத்துக் கொண்டுதானே நாலுவீடு சோறு கஞ்சி வாங்கிச் சாப்பிடணும்—அதுக்காகத்தான் எனது வருங்காலத் தொழிலுக்கு அடிப்படையான இந்தக் கருவியை வாங்குகிறேன் நான்!"

அறவாழி, விஷமப் புன்னகையுடன் இந்த வார்த்தைகளைக் கூறும்போது, பொன்மணியின் முகம் முன்னிலும் கவலை படர்ந்த நிலையில் மாறிவிட்டது. அறவாழி, தன்னைப் பற்றி தவறான கணக்கு போட்டிருக்கக் கூடும் என்பதையும் அவள் புரிந்துகொண்டாள்.

"அதைப் பற்றி உங்களிடம் விபரம் தரவே உங்களைத் தேடி வந்தேன்" என்று கூறியபடி பொன்மணி, கண்களில் சிந்தும் முத்துக்களைக் கன்னங்களில் உருளவிடாமல் துடைத்துக்கொண்டாள்.

மழையும் சற்று அதிகமாகப் பெய்யத் தொடங்கவே, அறவாழி அவளை உள்ளே வருமாறு அழைத்தான். அவளும் அறைக்குள்ளே சென்றாள். காற்றும் சற்று பலமாக வீச ஆரம்பித்தது. சிறிய துண்டு ஒன்றைக் கொடுத்து மழைத்தூரல்களால் நனைந்துவிட்ட முகத்தைத் துடைத்துக்கொள்ளச் சொன்னான். பொன்மணிக்கு அந்த உபசாரங்கள் முழுத்திருப்தியை ஏற்படுத்தவில்லை. தன்னிடம் பெருங்குறையொன்றைக் கண்டுவிட்ட வேறுபட்ட உள்ளத்தோடுதான் அவன் தன்னிடம் பழகுகிறான் என்று அவள் எண்ணி ஏங்கினாள். எதையும் மனம் விட்டுப்பேசக்கூடிய அளவுக்கு இருவரும் பழகிவிடவும் இல்லை. ஒருநாள் சந்திப்பு—அதிலே அர்த்தம் பொதிந்த பார்வை—அவ்வளவுதானே தவிர இருவர் இதயங்களையும் உராய்ந்திட வைத்து அதிலே கிளம்பும் காதலெனும் தீப்பொறியை எதிர்ப்பு எனும் பஞ்சுப்பொதிகளின்மீது வீசிடவில்லை! அதனால் அவள் தயங்கினாள். ஆனாலும் தன் மீதுள்ள தவறான எண்ணத்தைப் போக்கியே தீர வேண்டுமெனத் துணிவு கொண்டாள்.

"ஊரிலே ஒரு மகஜர் அனுப்பியிருக்கிறார்களே......" என்று ஆரம்பித்தாள்.

"ஆமாம்—கேள்விப்பட்டேன். அதில் கையெழுத்திட்ட அனைவருக்கும் என் நன்றி!" என்றான் அவன்.

பொன்மணி, அதற்கு மேலே பேச முடியாமல் தவித்தாள். அறவாழியே பேச்சைத் தொடர்ந்தான்.

"இந்த ஊரிலே இருந்து மட்டுமல்ல; இந்த வேலையிலேயிருந்துகூட என்னை விடுதலை செய்து விடுவார்களேயானால் மிகவும் சந்தோஷப்படுவேன்!"

"நான்கூட அதில்......" என் இழுத்தாள் பொன்மணி.

"நீகூட?...நீகூட...?...என்ன? என்ன? புரியும்படிச் சொல்!" எனக் குறும்பாகக் கேட்டான் அறவாழி.

"எல்லோரும் கையெழுத்துப் போட்டான பிறகு நாங்கள் இரண்டு மூனு பேர் போட்டாலும் போடாவிட்டாலும் அந்த மகஜருக்கு உயிர் வரத்தான் போகிறது அப்படியிருக்கும்போது ஊர்க் கட்டுப்பாட்டை ஏன் மீறவேண்டும் என்று பயந்துதான் எங்கள் வீட்டில் அதில் கையெழுத்துப் போட்டோம். அதைத் தவிர உங்கள்மேல் எந்த விதமான விரோதமும் இல்லை!"

"சேசே! அப்படி யார் சொன்னது? இந்த ஊரில் யார்தான் எனக்கு விரோதி? எல்லோரும் ஊர் க்ஷேமமாக இருக்கவேண்டும் என்பதற்காகத்தானே என்னை விரட்டியடிக்க விரும்புகிறார்கள்?..."

"நீங்கள் அப்படிச் சொல்லக் கூடாது. எங்கள் செய்கைக்கு மாசு கற்பிக்காதீர்கள். ஊரே ஒன்றுகூடிவிட்ட பிறகு நமக்கு மட்டுமென்ன என்று விட்டில் நினைத்து விட்டார்கள். அது மட்டுமல்ல; அந்த மகஜர் தபாலில் சேராத வழிக்கு அதைக் கிழித்துக்கொளுத்திவிடநானும் தம்பியும் முடிவு செய்திருந்தோம். அந்த நம்பிக்கையில் மகஜர் தம்பியின் கையில் வரும் என்பதனாலேயே பயமில்லாமல் அதில் கையெழுத்தும் போட்டேன்."

"அதனால் என்ன; பரவாயில்லை—அதற்காக என்னைத் தேடிக்கொண்டா வரவேண்டும்? இது அற்ப விஷயம்!"

"உங்களுக்கு அற்ப விஷயம்! ஆனால் எனக்கு?"

"உனக்கும் அப்படித்தான்!"

"எனக்கு அப்படியிருந்தால் இங்கே ஏன் வரப்போகிறேன்!"

—இதைக் கூறிவிட்டு அவள் தலையைக் குனிந்துகொண்டாள். அறவாழிக்கும் அவள் வாக்குமூலம் சரியென்றே தோன்றியது. எத்தனையோ ஆண்டுகளாக ஊர்க்கட்டுப்பாட்டுக்குள் அடங்கியிருந்து விட்டு திடீரென ஒருநாள் அறிமுகமான தனக்காக ஊராரை விரோதித்துக் கொள்ளக்கூடிய சூழ்நிலையைப் பொன்மணியின் குடும்பத்தார் உருவாக்கிக் கொள்ள வேண்டியதில்லையென்றே அவனும் நினைத்தான்.

ஆனால் அந்த ஊர் ஒற்றுமையையும் பொருட்படுத்தாமல் பொன்மணி தன்மீது கொண்ட பிரியத்தை செயல் மூலம் காட்டி தன்னிருப்பிடத்திற்கே வந்துவிட்டதை யெண்ணிப் புதிய மகிழ்ச்சி கொண்டான். ஆவலும் அன்பும் பேச்சு உருப்பெற்றன.

"இப்படியொரு விசித்திர மான கிராமத்தை நான் கண்டதேயில்லை. வந்ததும் வராததுமாக என்னைக் கண்டு வெறுப்பவரும்—விரட்ட எண்ணுபவரும்—விருப்பங் காட்டுபவரும்—எல்லோரையும் சில தினங்களில் சந்தித்து விட்டேன்!"

"எல்லோரையும் பற்றி தனித் தனியே ஒரு தீர்மானத்திற்கும் வந்திருப்பீர்கள்!"

"நிச்சயமாக!...உனக்கு யாரைப் பற்றிய என் தீர்மானம் தெரிய வேண்டும்?"

அவள் நாணினாள். "என்னைப் பற்றிக் கட்டியிருக்கும் முடிவு என்ன என்று........."

"உன்னைப் பற்றியா?......"

அவள் அவனையே பார்த்தாள். அவனும் அவளையே பார்த்துக் கொண்டு நின்றான்.

மழை மிகவும் கனமாகப் பெய்தது—காற்றும் வரவரக்கடுமையாயிற்று-புயல் வீசுவதற்கான அறிகுறிகள் தென்பட்டன!

வானத்தைவிடப் பெரும் புரட்சி—இங்கே இருவர் உள்ளங்களிலும் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

தொடரும்

000000000000000000000000

கூட்ட ஒத்திவைப்பு
அறிவிப்பு

★

கோவை மாவட்ட மாநாட்டிற்குப் பிறகு தூத்துகுடியில் தங்கி இடைத் தேர்தலுக்கான பணிகளில் ஈடுபட வேண்டியிருப்பதால், ஜூலை 25-ம் நாள் முடிய ஏற்கனவே ஒப்புதல் தந்துள்ள கூட்டங்களை ஒத்திவைக்க வேண்டியவனுயிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

000000000000000000000000

யார் பெரியார் ?

பெரியாருக்கு ஆதித்தன் வழி காட்டுகிறாராம்—நாம் தமிழர் இயக்கப் பத்திரிகையான 'தினத் தந்தி" கார்டேன் போடுகிறது!

1940-ம் ஆண்டு 'விடுதலை' தலையங்கத்திலேயே நாடு பிரிய வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி [அடுக்குச் சொல் அழகு தமிழில்] எழுதியிருக்கிறார் பெரியார் என்று விடுதலையில் அறிவிப்புகள் வந்த வண்ணமிருக்கின்றன!

யார் முதலில் சொன்னால் என்ன?

வடவர் பிடியிலிருந்து—

தமிழர், தெலுங்கர், மலையாளிகள், கன்னடியர்—ஆகிய திராவிட இனமக்கள் விடுபட வேண்டும் என்ற விடுதலை உணர்ச்சி பரவினால் நமக்கு மகிழ்ச்சியே!

'உதய சூரிய'னுக்கே வாக்களிப்பீர்!

"தீராத விடம்! பற்றி எரியட்டும் !!"

★

"தினத்தந்தி" கூறுகிறது!

8—7—58 தினத்தந்தியில் தீராத விடம் (திராவிடம்) என்ற தலைப்பில் வந்துள்ள கட்டுரை யொன்றில்—

"திராவிட நாடு திராவிடருக்கே—எனக் குரல் எழுப்பிய ஈ. வெ. ரா பெரியாரும் இன்று திராவிடம், தமிழர்களுக்குத் 'தீராத விடம்' என்று கண்டு நாம் தமிழர் இயக்கக் கொள்கைகளை ஆதரித்து வருகிறார்."

"பட எரிப்புப் போராட்டத்தில் திராவிடமும் எரிந்து போகப் போகிறது. தீராதவிடம் எரிந்தே போக வேண்டும்!"

—எனக் காரசாரமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

விடுதலை ஏட்டின் முகப்பில் பொறித்துள்ள "திராவிட நாடு திராவிடருக்கே!" எப்போது அகற்றப்படப் போகிறதோ, தெரியவில்லை!

"திராவிடர் கழகம்" என்பதே தீராத விடக் கழகம் எனப் பொருள் படுமாதலால் அதற்கும் ஒரு மாநாட்டை ஆதித்தனின் சகல பொறுப்புக்களில் கூட்டி கழகப் பெயரை மாற்றினாலும் மாற்றக் கூடும்!

"திராவிடத் தந்தை பெரியார்" என்பது "தீராத விடத் தந்தை" என ஒலிக்குமாதலால், அதையும் "தமிழ்த் தந்தை பெரியார்" என அவசரமாக மாற்றியமைக்க வேண்டியிருக்கும்.

அய்யகோ! எவ்வளவு சீக்கிரத்தில் 'திராவிடம்' என்ற இலட்சியச் சொல் பெரியாருக்கு தீராத விடமாகி விட்டது!

இதை யெண்ணிப் புலம்புகிறதே பேதை நெஞ்சம்; என் செய்வேன்!

தூத்துக்குடி தொகுதித் தேர்தல்

★

கிளைக் கழகத் தோழர்களே! ஆதரவாளர்களே! பொதுமக்களே!

தூத்துக்குடித் தொகுதி இடைத் தேர்தல் அண்மையில் நெருங்கிக் கொண்டிருக்கிறது. அது 25—7—58-ல் நடைபெற இருக்கிறது. நம் கழகத்தின் நீண்டநாள் உழைப்பாளரும், பொதுக்குழு உறுப்பினரும், சென்ற முறை போட்டியிட்டு சிறப்பான வாக்குகளைப் பெற்றவரும் ஆன தோழர் எம். எஸ். சிவசாமி அவர்கள் கழகத்தின் சார்பாகப் போட்டியிடுகிறார்.

தேர்தல் பணிகளைச் சிறப்பாகவும், செம்மையாகவும் நடத்தத் தலைமைக் கழகச் சார்பில் தோழர்கள் மு. கருணாநிதி, கே. ஏ. மதியழகன், எஸ். முத்து ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தேர்தல் பணிகளை முன்னின்று நடத்தவும், தேர்தல் நிதி திரட்டவும் முற்பட்டுள்ளனர். அறிஞர் அண்ணா அவர்களும், சொற்பொழிவாளர்களும் சட்ட மன்ற—பாராளு மன்ற உறுப்பினர்களும், தேர்தல் பணிகள் ஆற்ற தூத்துக்குடிச் செல்கிறார்கள்.

கழகம் போட்டியிடும் முக்கியத்துவத்தை உணர்ந்து பாடுபடவும், பொருளுதவி புரியவும், அன்பும் ஆர்வமும் கொண்ட ஆங்காங்குள்ள கிளைக் கழகத் தோழர்களும், தனிப்பட்ட நண்பர்களும், குறிப்பாக நெல்லை மாவட்டத் தோழர்களும் கடமையுணர்ச்சியோடு முன்வர வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

நிதி தாரீர்! தேர்தல் நிதி தாரீர்! தேர்தலைப் பொலிவோடும் வலிவோடும் நடத்த நிதி தாரீர்! சிறப்பைத் தேடித் தர விரைந்தோடி வாரீர்! வாரீர்! என்று இருகை நீட்டி அழைக்கிறோம், வாரீர்!

'அறிவகம்'
சென்னை—13
2—7—58

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச் செயலாளர், தி. மு. க.

தூத்துக்குடி தேர்தல் நிதி அனுப்பிவைக்கவேண்டிய முகவரி:—
பொதுச் செயலாளர், தி. மு. கழகம்,
'அறிவகம்,' இராயபுரம், சென்னை-13.

கேட்டாரையா கேள்வி; கேலிக்குரிய கேள்வி!

"தென்னாடு முன்னேறி விட்டது...!" என்கிறார். "வடக்கை விட நல்ல நிலைமைக்குச் சென்றுவிட்டது...!" என்று மகிழ்கிறார். "கல்வித் துறையிலும், தொழில் துறையிலும் வியக்கத்தக்க வளர்ச்சியை அடைந்து விட்டோம்..." என்று ஆசையை ஊட்டுகிறார்.

இந்த சிறிதளவும் உண்மை கலப்பற்ற மலையளவு பொய்களைச் சொல்லுவது யார்? கனம் காமராசர்தான்!

இப்படி காங்கிரசின் சாதனைகள் இவை என்று வாய்க்கு வந்தபடி மேடை கண்ட இடமெல்லாம் சொல்லிக் கொண்டு வருபவர்தான், திராவிட முன்னேற்றக் கழகத்தை நோக்கி கேள்விக் கணைகள் தொடுக்கவும் தயங்குவதில்லை.

"நான்கு மொழிக்காரர்களைக் கொண்ட 'திராவிடக் கூட்டாட்சி' வேண்டும் என்று தி. மு. கழகம் கேட்கிறது. அப்படி சேர்ந்தால் அந்த நான்கு மொழி பேசும் மக்களும் ஒற்றுமையாக இருக்க முடியுமா?"

"அப்படி சேர்ந்து வாழ நினைப்பவர்கள் ஏன் இந்திக்காரனோடு சேர்ந்து வாழக்கூடாது?"

—இப்படி புதுக்கோட்டையில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் எதிரே வீற்றிருந்த மக்களைப் பார்த்துக் கேள்விகளைக் கேட்டுவிட்டு, "எனவே, நாட்டுப் பிரிவினை என்ற மனப்பான்மை வேண்டாம்" என்று முத்தாய்ப்பும் வைத்திருக்கிறார்!

காமராசர் இன்று ஏதோ பதில் சொல்ல முடியாத கேள்விகளைக் கேட்டு விட்டதாகக் கருதுகிறார்; எனவே பிரிவினை வேண்டாம் என்கிறார். ஆனால் என்றைக்கு "திராவிட நாடு திராவிடருக்கே!" என்ற முழக்கம் முதன் முதலில் தென்னகத்தில் எழும்பிற்றோ; அன்றிலிருந்தே இந்தக் கேள்விகளுக்கான விடைகளும் சொல்லப்பட்டுத்தான் வருகின்றன! திராவிட முன்னேற்றக் கழகத்தில் அங்கம் வகிக்கின்ற சாதாரணத் தொண்டர்கூட இந்த வினாக்களுக்கு விடை தந்து, காமராசரது மடை திறந்த மகிழ்ச்சிப் பெருக்குக்கு அணை போட முடியும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆணி வேரை ஆராயத் துணிகிறது அமைச்சர் குழு! அதே நேரத்தில் அதன் கொள்கைகள் என்ன என்ன; அதை நிறைவேற்றக் கொண்டிருக்கும் திட்டங்கள் எவை எவை— என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டால், இந்தக் கேள்விகள் எழும்ப வழியே யில்லை.

"நான்கு மொழிக்காரர்களும் ஆட்சி அமைத்தால், ஒற்றுமையாக இருக்க முடியுமா?"

—காமராசர் கேட்கிறார்.

நாம் இன்று கோருகிற திராவிடத்தில் உள்ளடங்கும் நான்கு மொழிகளும்—தமிழ் தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகள் ஒன்றுக்கொன்று உச்சரிப்பில்—இன அடிப்படையில் நெருங்கிய தொடர்பு கொண்டவை!

அவைகள் ஒன்றாக இருக்க முடியாது—இது காமராசரது மறைமுக வாதம்!

ஏன் முடியாது?

இந்த நான்கு மொழிகளும் ஒரே தாயின் வயிற்றில் பிறந்த நான்கு குழந்தைகள்! இந்த நான்கும திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது — என்று ஒவ்வொரு ஆராய்ச்சியாளரும் தெள்ளத் தெளியக் கூறியிருக்கிறார்கள்.

ஆனால், இந்தி மொழியோ இலக்கண வளமும், இலக்கிய வளமும் அற்ற நோய்க் குழந்தை! அந்தக் குழந்தையோடு சேர்ந்து இருந்தாலே அந்த வியாதிகள் இந்த நான்கு மழலைச் செல்வங்களையும் நாளடைவில் சாகடித்துவிடும்!

இந்த முரண்பாடுள்ள மொழிக்காரர்களையே ஒன்றாக இருக்க வேண்டும் என்று வாதிடுகிறார்கள் அவர்கள்; வடக்கும் தெற்கும் ஒன்றாகவே இருக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள்.

அந்த ஒற்றுமை விரும்பிகள், மொழியால் மட்டுமல்ல; இனத்தால் — பழக்க வழக்கத்தால் ஒன்றுபட்ட இந்த நான்கு மொழி பேசும் திராவிட மக்கள் ஒன்றாக இருக்க மாட்டார்கள் என்று இப்போதே ஆருடம் கணிப்பது விசித்திரமே!

"அப்படியானால் இந்திக்காரனோடு ஏன் சேர்ந்து வாழ முடியாது?" என்று கேட்கிறார் காமராசர்.

அது மிக மிக விசித்திரமான கேள்வி. அப்படி வாழ முடியாததால்தானே, இந்தப் பிரிவினைப் போராட்டமே துவங்கிற்று?

இந்தி மொழி பேசும் வடக்குடன் தெற்கு என்றும் ஒன்றாக இருந்ததில்லை. வெள்ளையனின் துப்பாக்கி முனைதான் ஒன்றாக இணைத்து ஆட்சி செலுத்தி வந்தது என்பது தான் திராவிட நாட்டுப் பிரிவினைக்கான முதல் ஆதாரமாக நாம் சொல்லுகிறோம்.

நாடு பிரிய வேண்டும் என்று அந்த வெள்ளையன் காலத்திலேயே எழுந்த உரிமைக் குரல் இன்று ஆட்சிக்கு வந்த காங்கிரசாரின் உதாசீனப் போக்கால் வலுப்பெற்று விட்டது!

முதலில் காதில் விழாதது போல் நடித்தவர்கள் — இன்றைய நமது மகத்தான வளர்ச்சி கண்டு மருண்டுபோய் —மாசு கற்பிக்கும் தீய முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார்கள்.

வடக்கும் தெற்கும் ஒன்றாக இருக்க முடியாது—இதை நாடு உணர்ந்துகொண்டுவிட்டது!

அதாவது இந்தியும் தமிழும், இந்தியும் தெலுங்கும், இந்தியும் மலையாளமும், இந்தியும் கன்னடமும் — ஒன்றாக வாழ முடியாது.

காமராசரது கவனம் மிகச் சாதாரணமான இந்த உண்மையை உணராதது விசித்திரமே!

ஃ

சவக் காட்டிலே...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அடிபட்டு, அல்லல்பட்டு, பிறந்த நாட்டை நோக்கி ஆயிரக் கணக்கானோர் அகதிகளாக வந்து குவிந்திருக்கிறார்களே; அவர்கள்கூட 'அவமானச் சின்னங்களாகத்தான் தோன்றுகிறார்கள் அவர் கண்களுக்கு!

இவை அனைத்தும்கூட அந்த வெறுப்பின் பிரதிபலிப்புதான் என்பதை யார்தான் மறுக்க முடியும்?

ஆனால், அதே நேரத்தில் பஞ்சாபிலேயிருந்து ஓடிவந்த அகதிகளுக்காக நேரு சர்க்கார் கண்ணீர் விட்டழுத காட்சியையும் மறக்க முடியவில்லையே! டெல்லி சஜானாவின் கணக்கேடு அந்த அகதிகளின் புனர் வாழ்வுக்காக 300 கோடி ரூபாய்களைச் செலவழித்திருக்கிற கணக்கைக் காட்டுகிற நேரத்தில் — நேருபிரானின் ஓரவஞ்சனைப் போக்கும் உள்ளங்கை நெல்லிக்கனியெனப் புலப்படுகிற நேரத்தில் —தமிழினம் தனது அடிமை வாழ்வை எண்ணிப் புலம்புகிறதே!

இன்றுகூட தினம் ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாய் செலவு செய்யப்படுகிறது, அந்தப் பஞ்சாபி அகதிகளுக்கு!

அந்த வடஇந்திய அகதிகளுக்குச் செலவழிக்கப்படுகிற தொகையில் தமிழனுடைய உழைப்பின் உருவும்—அவன் தந்த வரிப்பணமும் கூடத்தான் கலந்திருக்கிறது!

ஆயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து வந்த அகதிகளைத் தமிழினம் பேணவேண்டுமாம், 'இந்தியர்' என்ற சொல்லுக்குக் கட்டுப்பட்டு!

ஆனால், பதினெட்டு மைல்கள் தாண்டி வசிக்கின்ற இலங்கைத் தமிழரை 'அன்னியர்' என்று ஒதுக்கிவிட வேண்டுமாம், நேருவின் கூற்றுப்படி!

இதை எண்ணிப் பார்க்கிற நேரத்தில்தான் 'ஏக இந்தியப் பிடிப்பு' அன்புப் பிணைப்பல்ல; கட்டி அணைத்துக் கழுத்தை நெறித்திடும் கயமைப் பண்பு என்பது புலனாகிறது!

நேரு குறிப்பிடுகின்ற அந்த அன்னிய இனம்தான், இன்று தாயகத்தை நம்பிப் பயனில்லை; தொல்லைகள் களையும் வழியும் இல்லை—என்று கருதி உலக நாடுகளின் அனுதாபத்தைப் பெறத் துடிக்கிறது!

இலங்கை பாராளுமன்றத்தில் இலங்கைத் தமிழர் காங்கிரஸ் தலைவர் திரு ஜி. ஜி. பொன்னம்பலம் இப்படிப் பேசியிருக்கிறார்:

"தமிழர் வாழ் பகுதியான வடக்கு மாகாணத்திலும், யாழ்ப்பாணம் மாவட்டத்திலும் சிங்களவர்மீது ஒரு தமிழர்கூட துப்பாக்கியால் சுட்டதில்லை. அப்படியிருந்தும், இந்தப் பகுதியில்தான் இராணுவப் படையினரும், கடற்படையினரும் பெரும் அளவில் குவிக்கப்பட்டிருக்கின்றனர்.

"வட மாகாணத்தில் ஏற்பட்ட கலவரங்களால் ஒரு சிங்களவர் உயிருக்குக்கூட ஆபத்து ஏற்படவில்லை. சிங்கள ஆண் ஒருவர்கூட பலத்த காயமடையவில்லை.

"தமிழர்களும், பார்லிமெண்ட் தமிழ் உறுப்பினர்களும் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டார்களேயன்றி, அத்தகைய கடுமையான நடவடிக்கை சிங்களப் பிரதேசமான தெற்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை!

—தவறிழைப்பவர்கள் — தகாதவழி நடப்பவர்கள் தமிழரல்ல என்று குறிப்பிடுகிறார் அவர். வேற்று நாட்டவராக இருந்தாலும், இப்படியொரு வேதனைக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதற்காக மனிதத் தன்மை கொண்ட எவரும் மனமிரங்கத்தானே செய்வர்!

ஆனாலும் நேருவோ 'அன்னியர்' என்ற அடைமொழியோடு தட்டிக் கழிக்கவே எண்ணுகிறார்!

பொன்னம்பலம் மீண்டும் குறிப்பிடுகிறார்:

"செய்தித் தணிக்கை என்று கூறிக்கொண்டு, 'இந்தப் பெரிய விபரீதத்திற்குத் தமிழர்கள்தான் பொறுப்பாளிகள்' என்ற கருத்தை ஏற்படுத்துவதற்கு, வானொலியையும் பத்திரிகைகளையும் இலங்கை அரசு பயன்படுத்துகிறது. ஐ. நா. சபையின் நடுநிலைமையான பார்வையாளர்களை இங்கு அழைப்போம்; இந்தத் துயர நிகழ்ச்சிகளுக்கு யார் பொறுப்பாளி என்பதை உலகத்தின் மனச்சாட்சி முடிவு செய்யட்டும்! உலக நாடுகளின் பார்வையாளர்கள் இல்லாவிட்டாலும், காமன்வெல்த் நாடுகளின் தூதுக் குழு ஒன்றையாவது இங்கு வருமாறு செய்யட்டும்; இங்குள்ள உண்மை நிலைமைகளை அவர்கள் ஆராய்ந்து, சமன் செய்து, சீர் தூக்கி, இதற்குக் காரணமானவர்கள் யார் என்பதை முடிவு செய்யட்டும்"—என்று!

அவருக்கு நம்பிக்கை இருக்கிறது; அங்கு நடைபெற்ற நாசச் செயல்களுக்குக் காரணமானோர் தமிழரல்ல; அவர்களது எதிரிகள் என்று பகிரங்கமாகச் சொல்லிக் கொள்ளும் சிங்களவர்தான் என்பதில் அசையாத நம்பிக்கை இருக்கிறது!

அந்த உண்மை, கையிலே இருக்கின்ற ஆட்சி பலத்தைக் கொண்டு மறைக்கப்படுகிறபோது—அதைவிட மோசமாக அந்தப்பழி அபாண்டமாய் தமிழினத்தின்மேல் சுமத்தப்படுகிறபோதுதான், அவரது ஆத்திரம் அளவு கடந்துபோகிறது.

ஆகவேதான் நடுநிலைமையாளர்கள் வரட்டும் — என்று துணிந்து அழைக்கிறார்.

சமன் செய்து, சீர் தூக்கி குற்றவாளிகளைக் கண்டுபிடியுங்கள் — என்று சவால் வடுகிறார்.

எதற்கும் அஞ்சாத கொடுங்கோல் தர்பார்தான் அங்கு நடைபெறுகிறது என்பதை ஊர்ஜிதப்படுத்துவது போலவே அவரது பேசசுக்குப் பதில் சொல்லியிருக்கிறார் பண்டாரநாயகா:

"இதிலே ஆழம் பொதிந்த மகா மர்மம் எதுவும் கிடையாது. ஐ. நா. நடுநிலை பாரவையாளர்கள் வரட்டுமே! எனக்கு அதைப் பற்றிக் கவலை இல்லை!"

பண்டாரநாயகாவின் இந்த வளைந்து கொடுக்காத பேச்சு, திரு. பொன்னம்பலத்தின் சவாலை ஏற்பதாகத்தான் இருக்கிறது!

இலங்கையிலே நடைபெற்று வருகின்ற கலவரங்கள் இன்னும் தொடர்ந்து நீடித்து—உலக அரங்கிலே பிரச்னைக்குரிய ஒன்றாக மாறி—நாளைய தினம் ஐ. நா. சபையின் உடனடி கவனத்தையும் கவருவதாகவே வைத்துக்கொள்வோம்—

திரு. பொன்னம்பலம் கோருவதைப்போல உலக நாடுகளின் சபை இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து ஆராய, ஆலோசிக்க ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழுவிலே இந்தியாவையும் சேர்க்கிறது என்று வைத்துக் கொள்வோம்—

அல்லது காமன்வெல்த் நாடுகளின் தூதுக் குழுவே ஒன்று அங்கு செல்ல நேருவதாக இருக்கட்டும்—

அப்போது நேரு என்ன செய்வார்?

அவைகளில் இடம் பெறாமல் விலகிக் கொள்வாரா?

அல்லது "அன்னிய நாட்டு விஷயமது! நமக்கும் அதற்கும் சம்மந்தமில்லை!" என்று வெறுத்து ஒதுக்கிவிடத்தான் முடியுமா?

— நேரு பஞ்சசீலம் போதித்து பார் புகழ் பெற்றவர் — ஆனால் கோவாவின் விடுதலைக்காக சலாசரிடம் மோதித் தோற்றவர்!

நடுநிலைமையாளர்களில் முதல்வர்; உலகத்தின் ஒரே சமாதானப் புறா—ஆனால் காஷ்மீர் பிரச்சினையில் தீர்வு காண முடியாத பெரும் தலைவலிக்காரர்!

ஆகவேதான் அவர் பண்டாரநாயகாவுடன் போராடப் பயப்படுகிறார்—உண்மை இதுதான் என்று சொல்லிவிட்டாலும் பரவாயில்லை!

அவர் வாதாட வேண்டாம்; வழக்காட வேண்டாம்!

இருதயம் அற்றோருக்கிடையே இன்னல்கள் ஏற்று, அலறித் தவித்து, வடக்கு நோக்கிக் கையேந்தி நிற்கும் தமிழினத்தைப் பார்த்து ஒரு அனுதாபச் சொல்—தரக்கூடாதா?

அவர்தம் குருதிக் குளத்திலே குளித்து மகிழும் குண்டர்களை நோக்கி ஒரு கண்டனக் குரல்—எழுப்பக்கூடாதா?

அந்த அளவுக்குக்கூடவா நெஞ்சிலே ஈரமில்லாமல் போய் விட்டது? இருதயம் இரும்பாகி விட்டது?

ஃ

வினா - விளக்கம்

வினா:—திராவிட நாட்டில் நாலு நாடுகள் (தமிழ்நாடு, கேரளம், ஆந்திரம், கருநாடகம்) இருப்பதுபோல இந்தியாவில் ஏன் இருக்கக் கூடாது?

விளக்கம்:—தமிழர்-தெலுங்கர்-மலையாளிகள்-கன்னடியர்-இனத்தால் ஒன்றுபட்டவர்கள். மொழியால் மட்டுமே வேறுபட்டவர்கள். வடநாட்டாரும் நாமும் மொழியாலும், இனத்தாலும், பண்பாலும் முரண்பட்டவர்கள். விடுதலை பத்திரிகை பழைய பைல்களைப் புரட்டிப் பார்த்தால் இதுபற்றி ஏராளமான விளக்கங்கள் கிடைக்கும்.

மரத்துக்கு மரம் மாறுதே நிறம்!

"திராவிடநாடு கிடைக்காது. ஆகவே, சுதந்திரத் தமிழ்நாடு பெற தமிழர்கள் போராட வேண்டும்—என்று குத்தூசி குருசாமி கூறினார்."

—இப்படியொரு செய்தியை 6—7—58 தினத்தந்தி வெளியிட்டிருக்கிறது.

இப்போது ஏற்பட்டுள்ள "தினத்தந்தி" "விடுதலை" கூட்டுறவின் உச்சம் போலும் இது!

இது என்ன ஆச்சரியம்! இன்னும் சில தினங்களில் விடுதலையில் "இன்றைய ராசிபலன்" வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை யென்கிறார் ஒரு இந்து பகுத்தறிவுவாதி!

"தமிழ்நாடு தமிழருக்கே—என்று கன்னடத் தலைவரான பெரியார் கூறுவதா?" என்று முன்பு கி. ஆ. பெ. விசுவநாதம் கேட்டார்.

நல்ல வேளை; ஆதித்தன் அந்த அளவுக்குப் போகவில்லை—அதுவரையில் மகிழ்ச்சிதான்!

விசுவநாதம் தோற்ற பிரச்சினையில் (அதாவது தமிழ்நாடு போதும் என்ற பிரச்சினையில்) ஆதித்தன் பெரியாரிடம் ஜெயித்து விட்டார் என்கிறார்கள், சில அரசியல் ஒய்வுக்காரர்கள்!

வடநாட்டு ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வு மங்காமல் பற்பல பகுதிகளில் வளருவது நம்மைப் பொருத்தவரையில் விடுதலைப் போராட்டத்திற்குப் பக்கபலந்தான் என்று கருதுகிறது, தி. மு. கழகம்!

கொள்கை முழங்கிய கோபி!

அறவழி நடக்கும் ஆற்றல் மிகு மறவர்-விண்பழி துடைக்க வீறு கொண்டெழுந்தோர்—விழிப்புற்ற சமுதாயத்தின் எழுச்சிக்கு வித்திட்டோர்—விரைந்தனர் கோபியில்!

நித்திரை மறந்தோர்—நித்தம் நித்தம் தாயகமே மூச்செனக் கொண்டோர்—முரசுதான் அதிர்ந்ததோ—அல்லது முக்கடல்தான் பொங்கிற்றோ என திக்கெட்டும் தமிழ் முழங்கக் கூடினர் அங்கே!

கோபியிலே 5, 6 தேதிகளில்

★ கோபி மாநாடு - பெரும் வெற்றி! ★

நடைபெற்ற கோவை மாவட்ட தி. மு. கழகத்தின் மாநாடு, இயக்க வளர்ச்சியிலே புதிய உணர்ச்சியை ஊட்டிற்று!

துவக்க நாளன்று பார்த்தோர் வியக்க—படையணி போல் நடைபெற்றது பெரிய தோர் ஊர்வலம்!

இரண்டாயிரம் சைக்கிள்கள் முன் செல்ல—

பின்னால் மோட்டார் சைக்கிள்கள் பல அணிவகுத்து வர—

அவதியுறும் தாயகத்தின் இன்னல்களை—அதைக் கண்ணெடுத்தும் பாராத ஆட்சியினர் போக்குதனை விளக்கிடும் அழகு ஓவியங்களைச் சுமந்து டிராக்டர்கள் சில அடுத்து வர—

அதற்குப் பின்னால் திறந்த காரிலே பகை மிரட்டும் மிடுக்கோடும்—படை திரட்டும் பாங்கோடும் நம் தலைவர்கள் வீற்று வர—

—இப்படி பார் புகழும் இனத்தின் ஊர்வலம் நடைபெற்றது!

விழாக் கோலம் பூண்டிருந்த வி. பி. ராசு நகரில் ஆயிரக்கணக்கானோர் வீற்றிருக்கும் வசதியோடு அர்ச்சுனன் பந்தல் தோற்றமளித்தது!

கோவை மாவட்டச் செயலாளர்—சோராமல் பணி புரியும் நாராயணன்தான் மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவர்—அவர் வரவேற்றார்.

பெரும் பலக்காரர்களை—வெறும் பேச்சால் நம் வேதனையை மிகைப்படுத்தும் வடவரை—தட்டிக் கேட்க நாம் அனுப்பியிருக்கும் இருவரில் ஒருவராம்—பாராளு மன்ற உறுப்பினர் இரா. தர்மலிங்கம் அவர்கள் மாநாட்டைத் திறந்து வைத்தார்.

பொதுப் பணியில் குன்றாத ஆசையும், மோசக் கருத்துடையோரின் வேஷத்தைக் கலைக்கும் ஆற்றலும் கொண்ட தோழர் ஆ... ...ம்பி அவர்கள் மாநாட்டி... செம்மையை ஏற்றுத் திறம்ப... ...டத்திவைத்தார்.

விடுதலைக்குப் போராடும் நமக்குத் தேவையான வீர உரைகளை—பகை வெல்லச் சூளுரைக்கும் சொற்பொழிவுகளை தனித்தனி தலைப்புகளிலே—நம் தலைவர்கள் தந்தார்கள், நாகம்மையார் பெயரமைந்த அரங்கிலே யிருந்து!

பொதுச் செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களின் சிறப்புரையும், அறிஞர் அண்ணா அவர்களின் பேருரையும் மாநாட்டின் சிறப்புக்கு மகுடம் சூட்டின!

முதல் நாள் இரவு நடைபெற்ற புதுமை நாடக மன்றத்தாரின் "உதய சூரியன்" நாடகம் தென்னகத்தின் இருள் கிழிக்கும் உதய சூரியன் என்று பார்த்துக் களித்தோர் பாராட்டினர்.

சம்பத் காட்டிய ஆர்வம்!

கோபி மாநாட்டில் கொள்கை விளக்கம் பெற்ற வீரர்கள், அள்ளிக் கொடுத்த வெள்ளிக் காசுகள் இதுவரை நடைபெற்ற வேறெந்த மாவட்ட மாநாடும் கண்டிராத ஒன்று!

38 000 ரூபாய் வசூல் செய்து செலவு போக 22,222 ரூபாயை மிச்சமாகக் காட்டியிருக்கிறார்கள்!

இயக்கத்திற்கு இந்த சம்பத்து கிடைத்த விதம—திராவிடத்திற்குக் கிடைத்த சம்பத்தாம்—சொல்லின் செல்வர் சம்பத் மாநாட்டின் பொருளாளராக இருந்து பணியாற்றிய திறனாலாகும்!

பாராளு மன்றத்திலே மட்டுமல்ல; பழகக் கிடைத்தோரிடமும், பக்கத்தில் வசிப்போரிடமும் இயக்கக் கொள்கைகளை விளக்கி நல்ல தொண்டாற்றி வரும் அவர் கோபியிலேயே முகாமிட்டார் மாநாட்டு வேலைகளைக் கவனிக்க.

சிறப்புக் கூட்டங்கள் நடத்தினார்—கிளைக் கழகங்களுடன் தொடர்பு கொண்டார்—சிறுதுளிகளைச் சேகரித்தார்—மாநாட்டுப் பந்தலிலே பெரு வெள்ளமாகச் சேர்ந்தது அத்தொகை!

இன்று பெரும் தொகையை மட்டுமல்ல; கோவை வட்டாரம் கொள்கைப் பட்டாளம் நிரம்பிய பகுதி என்பதையும் காட்டிவிட்டார்!

ஆர்வமிகு தோழர்களின் ஆக்கப் பணி!

நேர்மையின் முனையும் மூறியாது—நெறி பிறழாது செயலாற்றக்கூடிய தங்கங்கள்—தமிழ் காக்கும் சிங்கங்கள் கோவை மாவட்டத்திலே ஏராளம்! அவர்களது குறை காண முடியாத கூட்டுப்பணி பாராட்டுக்குரியது!

தோழர் அப்பாவு—எப்பாடு பட்டேனும் மாநாட்டைச் சிறப்பாக்கிட வேண்டுமென்ற துடிப்போடு—அப்பாலும் இப்பாலும் நகர்ந்தாரில்லை!

பெற்ற நாட்டிற்குழைக்கும் ஆற்றல் மிக்கோன் நான்; பூமிக்குப் பாரமல்ல; எனப்பூரிப்புடன் பணியாற்றிய சாமிநாதன்!

இந்த இருவரும் மாநாட்டுச் செயலாளர்கள்—அயர்வின்றி உழைத்திட்ட செயல் வீரர்கள்!

அன்னம் பாராது—கண்ணுறக்கம் கொள்ளாது பாடுபட்ட தொண்டர் படையினர் சோர்வில்லாக் காளையர்—ஆர்வத்தால் அவர்களை ஊக்குவித்த தலைவர்களாம் தோழர்கள் சிரங்கராயர், பழனிச்சாமி-இருவருமே படை நடத்தும் பாங்கிலே வெற்றி கண்டனர்!

விளம்பரப் பொறுப்பேற்ற வெங்கடாசலம் அப்பணிக்கேற்ற பண்புமிகக்கொண்டவர்! மாநாட்டுச் செய்திகளைப் பரப்புவதோடு மட்டுமல்ல; கொள்கையைப் பரப்புவதிலும் ஆற்றல் மிகக் கொண்டவர்!

இவர்களோடு எடுத்தெழுத முடியாத எண்ணற்றோர்—ஏடு கொள்ளா தொகையினர் நாடு மீட்கச் சூளுரைத்த மாநாட்டின் வெற்றியிலே பங்கேற்றனராம்!

மாநாட்டின் சீரும் சிறப்பும் கண்டு வெளி மாவட்டங்களிலிருந்து வந்த தோழர்கள் அத்தனை பேரும் வியந்தனர்; மகிழ்ந்தனர்.

மராட்டியம் கண்டு மகிழ்ந்தது!

மகிழ்ந்தது நாம் மட்டுமல்ல; மலையொத்த நம் வளர்ச்சி கண்டு—தலை கொடுத்தேனும் தாயகத்தை மீட்டிட வேண்டுமென்ற மனம் குலையா திறம் கண்டு மராட்டியத்திலேயிருந்து வந்த பாராளு மன்ற உறுப்பினர் பாவா சாகிப் என்பவரும் மகிழ்ந்தாராம்.

அவர் மராட்டியத்திலேயுள்ள உழவர் கட்சியின் தலைவர். நம் இயக்கத்தைப் பற்றி அறியவும், நம் பணியினை உணர்ந்து கொள்ளவும் மாநாட்டைப் பார்க்க வந்திருந்தார்!

பத்திரிகைகள் அத்தனையும் ஒட்டு மொத்தக் கூட்டாக நம் வளர்ச்சியை இருட்டடிப்பு செய்து வருகிற நேரத்தில்—தன்னிரு கண்களால் நம் எழுச்சியைப் பார்த்த அவர், மனம் திறந்து ஒருண்மையை வெளியிட்டாராம்:

"எங்கள் மாநிலங்களில் எல்லாம் மூன்று மாதத்திற்கு முன்பே பிரமாதமான விளம்பரங்கள் செய்து—கட்டணம் ஏதுமின்றி—இலவசமாக மாநாடுகள் நடத்தினாலும், இந்தக் கூட்டத்தில் நான்கில் ஒரு பகுதியைக்கூட காண முடியாது!" என்று.

இப்படிப்பட்ட பாராட்டுகள் குவிகிற நேரத்தில்தான்—நாம் இந்த மகத்தான வளர்ச்சிக்கு காணிக்கையாகத் தந்த தியாகத் தழும்புகளைத் தடவிப் பார்த்துக் கொண்டு—புது மிடுக்கு பெற்று—வேக நடை போடுகிறோம், இலட்சிய முகடு நோக்கி!

தேர்தல் நிதி!

மாநாட்டில் குழுமியிருந்தோரிடையே தூத்துக்குடி தேர்தலுக்கு நிதி கேட்கப்பட்டது.

உண்டியலேந்திய தலைவர்கள் கூட்டத்தினிடையே புகுந்தார்கள். நீதிக்குப் போரிடும் செயலுக்குக் கொடுக்கத் தயங்காத நம்மவர்கள் தந்த காலணா, அரையணாக்கள் 1,312 ரூபாயாக ஆயிற்றும். அத்துடன் குறைகின்ற தொகையையும் சேர்த்து தேர்தல் நிதிக்கு ரூ. 5000-ஆக்கக் கொடுத்துவிட்டார்கள்!

இந்த வெற்றிகள் எல்லாம் எதைக் காட்டுகின்றன?

இன்னல் அல்லல்கள் நிறைந்த போர்ப் பாதையின் நடந்து—நாம் ஈடுபட்டிருக்கின்ற பெரும் பயணத்திலே "வெற்றி நிச்சயம்! வெற்றி நிச்சயம்!" என்பதைத்தான் புலப்படுத்துகின்றது! புது வேகம் தருகின்றன!

சுதந்திரத் தமிழகமும்-தேர்தலும்! காற்றுவாக்கில் வந்த செய்தி

ஊர்ஜிதமற்ற ஒரு சுவையான செய்தி காற்று வாக்கில் நம் காதில் விழுந்தது.

"நாட்டு விடுதலைக்கு சட்டசபை நுழைவு அவசியமில்லை" யென்று கருதுகிற திராவிடர் கழகத்துடன் நாம் தமிழர் இயக்கம் தொடர்பு கொண்டிருப்பதால் அடுத்த பொதுத் தேர்தலில் தோழர் ஆதித்தனும், அவரது கட்சியினரும் போட்டியிட மாட்டார்கள் என்று தெரிகிறது. இப்போதுகூட சட்டசபையால் என்ன சாதிக்க முடியும்—ஒழிக்க வேண்டியவைகளில் சட்டசபையும் ஒன்று என்பதாகப் பெரியார் கூறி வருவதால் திரு. ஆதித்தன் தனது எம். எல். ஏ. பதவியை ராஜினாமா செய்துவிடக் கூடுமோ எனச் சிலர் ஐயுறுகிறார்கள். எல்லாமே பொறுத்திருந்து பார்க்க வேண்டியவைகளாகுமே தவிர அவசர முடிவுக்கு விடக்கூடிய விஷயங்களல்லவே!

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, சென்னை-6, தமிழ்நாடு.